பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஆடி தை மீ 26 உ வெள்ளிக்கிழமை (8-02-199 ) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 73

# அகதிகளைத் திருப்பி அனுப்ப இந்தியத் தரப்பு "விடாப்பிடி"!

## ராஜதந்திர மட்டத்தில் நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப்ரவரி 8

தமிழகத்தில் தங்கியிருக்கும் ஈழத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் முயற்சியில் இந்தியத் தரப்பினர் "விடாப்பிடி"யாக இருப்பதாக அறியவருகிறது.

இது தொடர்பாக இந்தியத் தரப்பினர் ஸ்ரீலங்கா அரசுடன் கூட்டுச் சேர்ந்து ராஜதந்திர மட்டத்தில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக சந்தேகிக்கப்படுகின்றது.

சுமார் 50 ஆயிரம் அகதிகளைத் தங்க வைக்கக் கூடிய முகாம் ஒன்றை வவுனியாவிலிருந்து மூன்று மைல் தொலைவில் உள்ள சமனங்குளம் பகுதியில் அமைப்பதற்கு ஸ்ரீலங்கா அரசு ஏற்பாடு செய்து வருவதாக முன்னர் செய்தி வெளியாகி இருந்தது தெரிந்ததே.

அகதிகளை திருப்பி அனுப்பும் முன்னேற்பாடு நடவடிக்கைகள் தமிழகத்திலும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அப்பாவிகள் பலியாவது தவிர்க்க முடியாதது!

### ரஞ்சனின் நொண்டிச் சாட்டு

கொழும்பு, பெப். 8

"வடக்கு — கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளின் போது பொதுமக்கள் கொல்லப்படுவது தவிர்க்க முடியாதது".

—இவ்வாறு கூறினார் ஸ்ரீலங்காவின் பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா. நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

வடக்கு, கிழக்கில் ஸ்ரீலங்கா விமானப்படையினர் பாடசாலைகள், அகதி முகாம்கள், கோவில்கள் போன்றவற்றின் மீது நடத்தும் கண்மூடித்தனமான தாக்குதல்களில் அப்பாவிகள் பெருமளவில் கொல்லப்படுவதைச் சுட்டிக்காட்டி, செய்தியாளர்கள் அடுத்தடுத்துக் கேள்விகளை எழுப்பிய போது, செய்தியாளர்கள்மீது அமைச்சர் "சீறி" விழுந்தார்.

"பொதுமக்களின் இலக்குகளை நோக்கி தாக்குதல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 20 ஆயிரம் குடும்பங்கள் இங்கு திரும்பி வருமாம்!

### ரஞ்சனின் நம்பிக்கை இது

கொழும்பு, பெப். 8

தமிழகத்தில் இருந்து 20 ஆயிரம் ஈழத் தமிழ் அகதிக் குடும்பங்கள் திரும்பி வரும். அந்தக்குடும்பங்களை தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

- இவ்வாறு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

தமிழகத்தில் இருந்து இந்த அகதிகள் பாதுகாப்புடன் திரும்ப செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஒத்துழைப்புத் தரும் என்றும் அவர் சொன்னார். (ஐ-எ)

## இந்தியக் கடற்படை பாதுகாப்பு வழங்குமாம்!

சென்னை, பெப் 8

தமிழ் நாட்டிலிருந்து தாயகம் திரும்பிச் செல்ல விரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகளின் படகுகளை இந்தியக் கடற்படை தக்க பாதுகாப்புடன் இந்தியக் கடல் எல்லையில் கொண்டு சென்றுவிட ஏற்பாடு செய்யப்படும்.

-இப்படி தமிழக மறுவாழ்வுத்துறை சிறப்பு அதிகாரி ஜி. எம். இராமதாஸ் தெரிவித்தார்.

படகுகள் இல்லாத இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்ப படகுவசதி செய்து தருவது பற்றி தமிழக அரசு பரிசீலிக்கும் என்றும் அவர் கூறியிருக்கிறார். (கூ-ா)

## மீசாலை குண்டு வீச்சில் சிறுவன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப் 8

கொடிகாமம், மீசாலைப் பகுதிகளில் நேற்று மாலை சுமார் 5 மணி தொடக்கம் விமானக் குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றன.

மீசாலை ரயில் நிலையத்துக்கு அருகில் நடத்தப்பட்ட குண்டு வீச்சில் சுமார் 14 வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் உயிரிழந்தான். அச்சிறுவனின் சடலம் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் வைக்கப் பட்டிருந்தது.

உயிரிழந்த சிறுவனின் பெயர், விவரம் தெரிய வரவில்லை.

குண்டு வீச்சில் ஏற்பட்ட முழு சேத விவரம் கிடைக்கவில்லை. (ஒ-15)

## வ.பி.போ.ச. ஊழியர்கள் கண்டன ஊர்வலம்

யாழ்ப்பாணம், பெப் 8

தமிழ் பிரதேசங்களில் விமானத் தாக்குதல்களை நிறுத்தக் கோரியும், தங்களுக்குரிய சம்பளத்தை வழங்கவும் கோரி வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கள் கண்டன ஊர்வலம் ஒன்றை நேற்று நடத்தினர்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை-தமிழ் பேசும் போக்குவரத்து ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று காலை கோண்டாவில் டிப்போவில் இருந்து ஆரம்பமான இந்த ஊர்வலம் யாழ். அரச செயலகத்தில் முடிவடைந்தது.

சுலோக அட்டைகளையும் பதாகைகளையும் தாங்கிய ... ஏழு டிப்போக்களைச் சேர்ந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மணலாறில் அதிரடித் தாக்கு! 7 படையினர் பலி!!

### ஆயுதங்களும் மீட்கப்பட்டன

யாழ்ப்பாணம், பெப். 8

நேற்றுக்காலை 7.45 மணியளவில் மணலாறுப் பகுதியில் கிலோமீட்டர் தியேட்டர் இராணுவ முகாமுக்கும், முந்திரிகைக்குளம் இராணுவ முகாமுக்கும் இடையில் அமைந்திருந்த இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இந்த அதிரடித் தாக்குதலில் 7 சிப்பாய்கள் உயிரிழந்ததாகவும், மூவர் காயமுற்றதாகவும், பெருமளவு ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதல் நடந்த சமயம் அந்த இடத்தை நோக்கி இரு முகாம்களிலிருந்தும் படையினர் முன்னேற முயன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திரியாய் முகாம் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 8

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள திரியாய் இராணுவ முகாம் மீது நேற்று முன்தினம் இரவு பத்து மணியளவில் பத்துக்கும் அதிகமான ஷெல்களை ஏவியதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தகவல்கள் கிடைக்கவில்லை. (உ)

## முச்சந்தி முரளி



[illegible] டினம் போலை......!

## நகரில் இருளும் வேளை ஹெலி கிரனேட் வீச்சு!

### அறுவர் காயம்; வீடு சேதம்

யாழ்ப்பாணம், பெப். 8

இருள் கவியும்நேரம்நேற்று மாலை 6.30 மணியளவில் வந்த ஹெலி ஒன்று, யாழ். நகரையும் அதனை அண்டிய பகுதிகளையும் வட்டமிட்டு, குடியிருப்புப் பகுதிகளை நோக்கி தாக்குதல்களை நடத்தியது.

யாழ். கோட்டை, அரியாலை, நல்லூர், திருநெல்வேலிப் பகுதிகளிலேயே தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நல்லூர் இராஜ வீதி, சட்டநாதர் கோவில் முன் ஒழுங்கை, திருநெல்வேலி கேணியடி ஆகிய பகுதிகளில் கிரனேட்டுக்கள் வீசப்பட்டன.

கிரனேட் வீச்சில் அறுவர் காயமடைந்தனர். இராஜ வீதியில் வீடு ஒன்றின் முற்றத்தில் கிரனேட் விழுந்து வெடித்ததில் வயோதிபத் தம்பதிகளான சின்னத்துரை [வயது 72], இராசம்மா சின்னத்துரை [வயது 62] ஆகியோரும்—

திருநெல்வேலி, கேணியடி, அரசடி வீதியிலுள்ள வீடு ஒன்றின் மீது விழுந்த கிரனேட்டில், குசினிச் சுவர் இடிந்து விழுந்து கனகசபாபதி கஜேந்திரகுமார் [வயது 6], கனகசபாபதி குமுதினி (வயது 10), கனகசபாபதி கீர்த்தனா [வயது 18] ஆகிய சகோதரர்களும்—

(4 ஆம் பக்கம் பார்க்க)

## போதை வஸ்து புழக்கம்; தடுக்க உதவுங்கள்!

### மக்களிடம் புலிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப் 8

போதைப் பொருள் புழக்கம் போன்ற நாசகாரச் செயல்களை செய்ய முனைபவர்களை இனங்காட்டுவதன் மூலம் விடுதலைப் போராட்டத்துக்கு பலம் சேருங்கள்!

—இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயற்குழு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றின் மூலம் மக்களைக் கேட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்ப

(3 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சாயிபாபாவின் அழகிய வர்ண ஸ்ரிக்கோஸ் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. 266/1, ஸ்ரான்லி வீதியில் உள்ள சிறீ சாயிறாம் புத்தகசாலையில் தொடர்பு கொள்ளவும். (வின்சர் தியேட்டர் அருகாமை). (15783)

எங்களிடம் ஆறு கலர் பல்லிரண்டு கொண்ட கலர் பென்சில் பெட்டிகள் உள்ளன. மொத்தமாகவும், இல்லறையாகவும் பெறறுக் கொள்ளலாம். விசேட கழிவு உண்டு. 390, ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரேசன் சந்தி, (சசிகாந்தன கடை முன்பாக) யாழ்ப்பாணம். [14917]

### நாற்றுக் கன்றுகள்

எம்மிடம் சிறந்த இன விதை எலுமிச்சை, ஒட்டுத் தோடை நாற்றுக்கன்றுகள் விற்பனைக்குண்டு. ஐம்பது நாற்றுக்களுக்குமேல் தொகையாக எடுப்பவர்களுக்கு கழிவு உண்டு. சைவ வித்தியா விருத்திச் சங்கம் கலாசாலை வீதி, திருநெல்வேலி. (C/5720)

### தவறிவிட்டது

426422506 X இலக்கமுடைய அடையாள அட்டை நல்லூர் கந்தசாமி கோவிலில் தொலைந்து விட்டது. கண்டெடுப்பவர்கள் தயவு செய்து கோப்பாய் அரசினர் வைத்திய சாலையில் ஒப்படைக்கவும். (15787)

பதிவு இலக்கம் 83/FM/07 உடைய எனது சிவப்பு நிற மருத்துவ பீட மாணவர் பதிவுப் புத்தகம் 5 - 2 - 91 அன்று பலாலி வீதியில் இலுப்பையடிச் சந்திக்கும், ஆரியகுளம் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் தயவு செய்து செல்வி. ரி. பாலசுப்பிரமணியம் 216, நாவலர் வீதி, முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (15785)

### மில்க்வைற் திரவ சவர்க்காரம்

(Milk White Liquid Soap)
வீட்டுச் சலவைக்குச் சிறந்தது. அழுக்கை அகற்றுவதில் தனிச்சக்தி வாய்ந்தது. புலோலி ப. நோ. கூ. சங்கத்திலும் விற்பனையாகிறது. (C/5735)

### தேவை

நாட்டுத் தேக்கு (கல் தேக்கு) விதைகள் தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். (C/5728)

### ஓப்செட் கலெண்டர்கள்

கடவுள் படங்கள், குழந்தைகள் படங்கள், சினிமா படங்கள், கண்ணைக்கவரும் வர்ணங்களில் லித்தோவில் அச்சிடப்பட்ட 1991ஆம் ஆண்டு கலெண்டர்கள் (மீரா வெளியீடுகள்) வியாபாரிகளுக்கு கழிவுண்டு. போட்டோஸ்ரற் பிரதிகளும் உடன்செய்யலாம். ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர் அகிலன் புத்தகசாலை பல் நிலையம், யாழ்ப்பாணம். [15763]

### பரிசு தரும் ''அக்கினி''

மீரா வெளியீடான ''அக்கினி'' நாவலை வாங்கியவர்கள் இணைக்கப்பட்டிருக்கும் கூப்பனை நிரப்பி உடனேயே அனுப்புங்கள். நூலுக்களில் தெரிவு செய்யப்படும் பத்து வாசகர்களுக்கு, ஒவ்வொருவருக்கும் 400/- ரூபா பெறுமதியான புத்தகங்கள் வழங்கப்படும். ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர் [15764]

### பிரத்தியேக கணித வகுப்புக்கள்

பேராதனைப் பல்கலைக் கழக பொது விஞ்ஞானத் தகுதி பெற்ற அனுபவமிக்க ஆசிரியரினால் 8-11ம் ஆண்டு A/L கணித மாணவர்களுக்கு கணிதம் வீடுகளில் சென்று கற்பிக்கப்படும். தொடர்பு:- Yarl Enterprises, 516, Hospital Road, Jaffna. (15761)

### கடைச்சல் வேலை தெரிந்தவர் தேவை

சகல கடைச்சல் வேலைகளும் தெரிந்தவர் எம்மிடம் உடனடியாக தொடர்பு கொள்ளவும். நல்ல சம்பளம் கொடுக்கப்படும். அம்பாள், கடைச்சல் தொழிற்சாலை, 219, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (15775)

### போட்டோஸ்ரற்

போட்டோஸ்ரற் பிரதிகளையும், றோணியோ பிரதிகளையும், தமிழ், ஆங்கிலரைப்பிங் வேலைகளையும், உடனடியாக பெற்றுக் கொள்ள ''கிளின் கட்'' 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (14608)

### மில்க்வைற் சலவைப் பவுடர்

துரித சலவைக்குச் சிக்கன சாதனம் மில்க்வைற் சலவைப் பவுடர் 100 வெற்றுப் பக்கெற் சேர்ப்பித்து ஒரு கைலேஞ்சி அன்பளிப்பாகப் பெறுங்கள். மில்க்வைற், யாழ்ப்பாணம். (C/5729)

### O/L MATHS

April 91இல் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்காக Paper Class நடைபெறும். சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் ஆசிரியர் V.T. ராஜேந்திரா. விபரங்கட்கு ஸ்ரார் (ஸ்ரான்லி கல்லூரி அருகாமை) அரியாலை. (15786)

## 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் வைத்தியநாதர் முத்தையா

தோற்றம்: 14 - 10 - 1914
மறைவு: 9 - 1 - 1991

உங்கள் வாழ்நாளெல்லாம் எங்கள் நல்வாழ்வுக்காக அயராது உழைத்து எம்மை உயர்நிலையில் வைத்த தந்தையே! உங்களை என்றும் மறவோம். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 08-02-91 வெள்ளிக்கிழமை திருப்பதி வேலணை கிழக்கு மணியகாரன் வீட்டடியில் உள்ள இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கிறோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''திருப்பதி''
வேலணை கிழக்கு,
மணியகாரன் வீட்டடி. (15780)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 23 - 04 - 1937

மறைவு: 26 - 12 - 1990

### திருமதி மகேஸ்வரி தங்கவேல்

(ஆசிரியை, யா/அச்சுவேலி ம. வி.)

பாசத் தெளிநீரே பண்புநிறை செண்பகமே
நேசத் தாலெம்மை வளர்த்தெடுத்த தாயவளே
தாகத் திலின்றே தவிக்கவைத்து சென்றுவிட்டீர்
வேகத் திலெம்மை விரைந்துவந்து காருமம்மா.

அன்பு மறவா
கணவன், பிள்ளைகள்.

நாவற்காடு,
அச்சுவேலி. (15789)

உ

## திருமண அழைப்பிதழ்

நிகழும் பிரமோதூத வருஷம் தைத் திங்கள் 28 ஆம் நாள் (1991 - 02 - 10) ஞாயிற்றுக்கிழமை மாலை 6.38 மணி முதல் மாலை 8.00 மணி வரையிலுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

| | |
|---|---|
| எமது கனிஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **சதானந்தன்** அவர்களுக்கும் | எமது சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி **மீனலோசனி** அவர்களுக்கும் |

இணுவில் சிவகாமி அம்மன் கோவிலில் மங்கல நாண்பூணல் இனிது நிகழவிருப்பதால், தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்:

| | |
|---|---|
| திருமதி க. கனகம்மா குடும்பத்தினர் ''ஆனந்த வாசம்'' இணுவில் மேற்கு, இணுவில். | திரு.செ.சோதிப்பெருமாள், ஜே. பி. (அதிபர், இணுவில் சைவ மகாஜன மகா வித்தியாலயம், அ.மி.த.க. பாடசாலை) |

சகோதரர்: சோ. ஸ்ரீஇராசன் (லண்டன்)
சோ. சந்திரலோசனி,
''சரஸ்வதி மகால்''
இணுவில்.
(15433)

## சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி ஆரம்பம்

மூளாய் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் பங்குனி மாதம் 1ஆம் திகதி சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சியை ஆரம்பிக்கவுள்ளோம். விண்ணப்பிப்போர் நேரடியாகவும், தபால் மூலமாகவும் மாசி 30 ஆம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்கவும்.

முகவரி:-

சிறுவர் பாடசாலை
ஆசிரியர் பயிற்சி நிலையம்,
மூளாய், சுழிபுரம்.

இயக்குனர்
[15782]

## நினைவு அஞ்சலி





| | |
|---|---|
| **சின்னத்துரை சோதிநாதன்** | **சோதிநாதன் ஜெகரூபி** |
| மண்ணில்: 24 - 06 - 1942 | ஆண்டவன் படைப்பு: 20 - 09 - 1944 |
| விண்ணில்: 05 - 02 - 1990 | அநியாய அழிப்பு: 20 - 10 - 1987 |
| முதலாம் ஆண்டு திதி: 08 - 02 - 1991 | |

நீங்கள் தந்த நேசமும் பாசமும்
என்றும் எங்களுக்கு வழிகாட்டும்...
அவலங்கள் நிறைந்த மண்ணில்
உங்கள் நினைவுகளை சுமந்து
நிற்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:
அன்புப் பிள்ளைகள், பெற்றோர்,
மாமன், மாமி, சகோதர சகோதரிகள்,
மைத்துனன்மார், மைத்துனிமார்.

''ஜெகவாசா''
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய். (15422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### எந்த முகத்துடன்..?

வளைகுடாப் போரில் ஈடுபட்டுள்ள பன்னாட்டுப்போர் விமானங்கள், கப்பல்கள் கொழும்பு வந்து எரிபொருள்களை நிரப்ப அனுமதிப்பதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

அதாவது வளைகுடா விவகாரத்தில் அமெரிக்காவின் பக்கம் சார்ந்து நிற்பது என்ற முடிவுக்கு அரசு வந்திருக்கிறது. அணிசேராமையே வெளிநாட்டுக் கொள்கை என்ற நிலைப்பாட்டின் சாயம் வெளுத்திருக்கிறது!

ஸ்ரீலங்காவின் நெருக்கடி மிகுந்த பொருளாதார நிலையை ஓரளவேனும் சரி செய்வதற்கு உதவிவரும் அமெரிக்காவுக்கும், அதன் ஆசிய நண்பனான ஜப்பானுக்கும் 'பந்தம் பிடிக்கின்ற' உள்நோக்கத்துடன், வெளிவிவகாரக் கொள்கை சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு மாறியிருக்கிறது!!

அபிவிருத்திக்கென வெளிநாடுகளிடம் கடன் வாங்கி, அதனை தமிழர்களை அழிப்பதற்காகப் போர்ச் செலவாக்கி வரும் ஸ்ரீலங்காவுக்கு, இப்போது கை கொடுப்பவர்களில் அமெரிக்காவும், ஜப்பானும் முதல் இரண்டு முன்னிலை ஸ்தானங்களையும் பிடித்துள்ளன.

"இலங்கைக்கு உதவும் நாடுகள் குழு"வில் அங்கம் வகிக்கும் நாடுகளில் பல கடந்த வருடம் பணம் வழங்குவதற்கு பின்னடித்தன. ஸ்ரீலங்காவில் மனித உரிமைகள் மீறப்படுவதாகக் கவலை தெரிவித்தன. ஆனால் அமெரிக்காவின் செல்வாக்குக்கு உட்பட்ட நாடுகளும், ஜப்பானும் துணை புரிய முன்வந்தன. அரசுக்கு கடன் வழங்கும் பிரதான நிறுவனங்களான உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகிய இரண்டும் அமெரிக்கச் செல்வாக்கு மிகுந்தவை; சார்புடையவை என்பதையும் மறந்துவிடுவதற்கில்லை.

ஒரு காலத்தில், அரபு நாடுகள் எண்ணெய் வளம் காரணமாக செல்வச் செழிப்புடன் விளங்கிய வேளை, அவற்றின் பணம் இலங்கைக்குத் தேவைப்பட்டது. அப்போது உள்நாட்டு முஸ்லிம்களுக்கு ஏதோ சலுகைகள், உரிமைகள் வழங்குவதாகக் காட்டிக் கொண்டு அரபு சார்புக் கொள்கையைக் கடைப்பிடித்தது. அரபுநாடுகளிடம் இருந்து கறப்பதன் மூலம் தேய்ந்து போன பொருளாதாரத்தை மொழுமொழுவாக்க முயற்சித்தது. முஸ்லிம் ஒருவரை — ஏ. சி. எஸ். ஹமீதை — வெளிவிவகார அமைச்சராக்கியது.

எனினும் ஸ்ரீலங்காவின் வெளிவிவகாரக் கொள்கை சொல் ஒன்று செயல் வேறாக இருப்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று; அரபு சார்பாகக் காட்டிக் கொண்ட வேளையில்கூட, அமெரிக்கத் தூதரகத்தில் இஸ்ரவேலிய நலன் காக்கும் பிரிவை இயங்க அனுமதித்தமை; மொசாட்டின் உதவிகளைப் பெற்றமை என்பன இரட்டை வேடத்துக்கு அசல் உதாரணங்கள்.

இப்போதும் அமெரிக்காவின், அதன் நேச நாடுகளின் போர் விமானங்களுக்கு, எரிபொருள் நிரப்பிக்கொண்டு, வளைகுடாப் போருக்கு சமாதானத் தீர்வுகாண எடுக்கப்படும் முயற்சியில்-பெல்கிரேட்டில் நடக்கும் அணிசேரா நாடுகள் இயக்கத்தின் அமைச்சர்கள் மட்டக் கூட்டத்தில்— ஸ்ரீலங்கா கலந்து கொள்ளப் போகிறது! இரட்டை முகங்களில் எந்த முகத்தை அங்கு காட்டும் எண்ணமோ தெரியவில்லை!!?

# அவசர தேவைகளுக்கு மட்டுமே

# இனி பிறப்புச் சான்றிதழ் பிரதிகள்

## 28 ஆயிரம் பேர் விண்ணப்பம் ஆனால் வந்ததோ 45 புத்தகங்கள்

யாழ்ப்பாணம், பெப். 8

பிறப்புச் சான்றிதழ் பிரதி வழங்குவதற்கான புத்தகங்கள் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டுள்ளன. ஆனால் அவசர தேவைகளுக்கு மட்டுமே சான்றிதழ் பிரதிகள் வழங்கப்படும்.

யாழ். செயலக பதிவாளர் பிரிவு அதிகாரி மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வாரம் கப்பல் மூலம் 45 பிறப்புப் பதிவு சான்றிதழ் வழங்கும் புத்தகங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

கடந்த வருடம் பிரதிபெற விண்ணப்பம் செய்தவர்களின் 28 ஆயிரம் விண்ணப்பங்கள் தேங்கிக் கிடக்கின்றன. தற்சமயம் கிடைத்த புத்தகங்களைப் பாவித்து அவற்றுக்கு பிரதி கொடுக்கத் தேவையான வேலைகளைச் செய்ய ஊழியர்கள் இல்லை.

அதனால் அந்த வேலைகள் செய்ய முடியாது.

ஆனால், நேர்முகப்பரீட்சை பாடசாலை அனுமதி, புனர்வாழ்வு நடவடிக்கைகள் போன்ற அவசர தேவைகளுக்கு விண்ணப்பிப்போருக்கு மட்டுமே இப்போது பிறப்புச் சான்றிதழ் பிரதி வழங்கப்படும்- என்றார் அவர். (உ-3)

## அதிகாரி வந்தார்

யாழ்ப்பாணம் பெப். 8

யூ. எஸ். உதவித்திட்ட அதிகாரி திரு மனோஜ் ராஜசிங்கம் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார். இந்த அமைப்பு மேற்கொள்ள உத்தேசித்துள்ள திட்டங்கள் குறித்து அவர் தேரில் அதிகாரிகளுடன் ஆராய்வார். [அ-3]

## 2 வாரங்களில் ஓய்வூதியக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், பெப். 8

யாழ். மாவட்டத்தில் ஓய்வு பெற விண்ணப்பித்து, ஓய்வூதியப் பணிக்கொடைகள் செயலகத்துக்குக் கிடைத்தவர்களுக்கான கொடுப்பனவுகள் இரண்டு வாரத்தில் வழங்கப்படவிருக்கின்றன.

கப்பல்மூலம் ஓய்வூதியத் திணைக்களத்தால் அனுப்பப்பட்டுள்ள 152 விதவை ஓய்வூதியர்களுக்கும், 175 சிவில் ஓய்வூதியர்களுக்குமான பணிக்கொடைகள் செயலகத்துக்கு நேற்று முன்தினம் கிடைத்தன. [அ-3]

## தோப்பூரில் மோதல்

யாழ்ப்பாணம், பெப். 8

செவ்வாய்க்கிழமை இரவு 8 மணியளவில் திருகோணமலை தோப்பூர் இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் —முகாமிலிருந்து நூறு யார் தொலைவில்— மோதல் இடம்பெற்றது.

ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை. [உ]

## காசோலை

யாழ்ப்பாணம், பெப். 8

இலங்கை வங்கியின் கொழும்பில் உள்ள ஒரு கிளையில் கணக்குவைத்திருக்கும் ஒருவர் வழங்கிய காசோலை ஒன்று நவாலிப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உதயன் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டிருக்கும் அந்தக் காசோலையை உரியவர் தகுந்த அத்தாட்சிகளைத் தெரிவித்து காலை 9 மணிக்கும் மாலை 4 மணிக்கும் இடையில் பெற்றுக் கொள்ளலாம். [அ]

## சிவராத்திரி எப்போது?

யாழ்ப்பாணம், பெப். 8

சிவராத்திரி எப்போது? — என்ற பிரச்சினை, சந்தேகம் எழுப்பப்பட்டிருக்கிறது!

இம்மாதம் 12 ஆம் திகதி என்று சில கணிப்புகள் தெரிவித்ததன் நிமித்தம், அன்றைய தினமே அரசாங்க விடுமுறையும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் மார்ச் மாதம் 14 ஆம் திகதியே சிவராத்திரி என்று வேறு சில கணிப்புகள் கூறுகின்றன. அதுவே சரியானதாக இருக்கும் என்று பலரும் தெரிவிக்கிறார்கள்.

இந்த பிரச்சினை 1877, 1906, 1964 ஆம் ஆண்டுகளில் எழுந்த போது, சந்திரமானம் கணித்து, தை மாதத்தில் சிவராத்திரி அனுஷ்டிப்பது தவறு என நிலைநாட்டப்பட்டதாக விஷயமறிந்தவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சமய தினங்களை நிர்ணயிப்பதில் இப்படி இரண்டு கருத்துகளும், கணிப்புகளும் ஏற்படும்படி உண்டாக்கி மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்துகின்றவை எனறு பகதர் ஒருவர் கவலை தெரிவித்தார். (அ)

### பாதிக்கப்பட்ட மக்களுக்கு

# ராணுவத்திடம் அனுமதி பெற்றே உதவலாம்!

மோதல் நடந்த இடத்திற்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் வழங்க விரும்பும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் முதலில் அருகில் உள்ள இராணுவ முகாமுக்கு அதுபற்றி அறிவிக்கவேண்டும்.

— இப்படி அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். [உ-எ]

## மீண்டும் படகுச் சேவை

புளியங்கூடல், பெப். 8

கடந்த சில தினங்கள் தடைப்பட்டிருந்த அராலித்துறை படகுச் சேவை மீண்டும் இரவு பகலாக நடைபெறுகிறது.

தீவுப்பகுதிக்குச் செல்லும் ஆசிரியர்களுக்கு குறைந்த கட்டணம் அறவிடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-125)

## கலைப்பை எதிர்த்து தி.மு.க. வழக்கு

தமிழகத்தில் தி. மு. க. அரசு கலைக்கப்பட்டதை ஆட்சேபித்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவிருக்கிறது.

தமிழக முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி இத்தகவலை வெளியிட்டார். (உ-3)

# மீட்பு நிதி செலுத்தும் திகதிகள் அறிவிப்பு

தமிழீழ மீட்பு நிதிக்கு பங்களிக்க விரும்பும் நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்தோர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையும், கரவெட்டி உ. அ. அ. பிரிவைச் சேர்ந்தோர் 16, 17 ஆம் திகதிகளிலும், பருத்தித்துறை உ. அ. அ. பிரிவைச் சேர்ந்தோர் 18 ஆம் திகதியும் அவற்றைச் செலுத்தலாம்.

இப்பகுதி மக்கள் தத்தமது இற்றாரவைகளினால் குறிப்பிடப்படும் இடங்களில் ஒதுக்கப்பட்ட நேரத்தில், தமது பங்களிப்பைச் செலுத்தலாம் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின நிதிப் பொறுப்பாளர் தெரிவித்தார். (உ)

# ராஜீய உறவு துண்டிப்பு!

அமெரிக்காவுடனும் அதன் நேசநாடுகளான பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, எகிப்து மற்றும் சவூதி அரேபியா ஆகியவற்றுடனுமான ராஜதந்திரத் தொடர்புகளை உடனடியாகத் துண்டித்துக் கொள்வதாக ஈராக் நேற்று அறிவித்தது.

பக்தாத் வானொலி மூலம் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

ஆனால் உத்தியோகபூர்வமான தகவல் ஏதும் தமக்கு ஈராக்கிடம் இருந்து கிடைக்கவில்லை என்று லண்டனில் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சு அறிவித்தது. வெறும் வானொலி அறிவிப்பின் மூலம் ராஜதந்திரத் தொடர்புகளைத் துண்டிக்க முடியாது என்று அமைச்சு அதிகாரி ஒருவர் சொன்னார்.

# மறு கப்பல் வந்த பின்பே மாணவருக்கு நூல்கள்

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடநூல்கள் அடுத்த கப்பல் வந்த பின்னரே வழங்கப்பட இருக்கிறது.

ஒரு தொகுதி பாட நூல்கள் 'லங்காசிறி' கப்பலில் கொண்டு வரப்பட்டு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் வைக்கப்பட்டுள்ளன.

அடுத்த தொகுதி பாடப் புத்தகங்கள் இன்னும் இரண்டொரு தினங்களில் வரவிருக்கும் 'வில்வி' கப்பல் மூலம் கொண்டுவரப்பட இருக்கின்றன.

அந்தப் புத்தகங்கள் வந்து சேர்ந்ததும் உடனடியாக புத்தக விநியோகம் ஆரம்பிக்கப்படும் என்று கல்வி அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஓ-3)

## போதை வஸ்து...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாவது:-

இன்று உலகு எங்கும் போதைப் பொருள் பாவனை ஒரு பெரிய சமூகப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. உலகின் பல நாடுகளில் போதைப் பொருள் கடத்தலுக்கு அல்லது விற்பனைக்கு தண்டனையாக மரண தண்டனைதான் வழங்கப்படுகின்றது.

போதைப் பொருள்கள் மனித ஆற்றலைச் சிதைத்து, அவர்களை நடைபிணங்களாக்கி விடுகின்றன.

ஒரு விடுதலைப் போராட்டம் நடைபெறும் நாட்டில் இளைஞர்கள், யுவதிகள் மத்தியில் போதைப் பொருள் பாவனையை அடக்குமுறையாளர்கள் திட்டமிட்டே பரப்பி விடுவார்கள். இதனால் போராடும் ஆற்றல் கொண்ட இளைஞர் பட்டாளம் செயலிழந்து முடங்கிப் போகும் சந்தர்ப்பம் உண்டு. இது பொதுவாக உலகு எங்கும் அடக்குமுறை அரசுகளும், ஆக்கிரமிப்பு வாதிகளும் கைக்கொள்ளும் ஒரு நயவஞ்சக தந்திரோபாயமாகும்.

இத்தகையதொரு முயற்சியையே முன்னர் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவமும் தமிழீழத்தில் நடைமுறைப்படுத்த முயன்றிருந்தது.

ஆனால் எமது தீவிரமான நடவடிக்கைகள் காரணமாகவும், மக்களின் விழிப்புணர்ச்சி காரணமாகவும் அந்த முயற்சிகள் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டன.

இன்று மீண்டும் இந்தப் போதைப் பொருள் புழக்கத்திற்கு சிங்கள இனவாத அரசும் மறைமுகமாக உதவ முனைகிறது. இந்த நாசகாரச் செயல்களை செய்ய முனைபவர்களை எமக்கு இனங்காட்டுவதன் மூலம் எமது விடுதலைப் போராட்டத்திற்கு பலம் சேர்போம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

# ராணுவமுகாமில் லடாய்! சிப்பாய் பலி; மூவர் காயம்

கொழும்பு, பெப். 8

திருகோணமலை மாவட்டத்தில் ஆயுதப்படை முகாம் ஒன்றில் சிப்பாய் ஒருவர் சக சிப்பாய்கள் மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் மூன்று சிப்பாய்கள் படுகாயம் அடைந்தனர்.

சம்பந்தப்பட்ட சிப்பாய் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார். இக் கொலைக்கான காரணம் அறியப்படவில்லை. (ஓ-எ)

# அம்புலன்ஸ் படகு விரைவில் தயாராகும்

தீவுப்பகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான அம்புலன்ஸ் படகு விரைவில் கிடைக்க இருக்கிறது.

இந்த அம்புலன்ஸ் படகை அமைக்க 17 லட்சம் ரூபாவை நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் யாழ். செஞ்சிலுவைச் சங்கத்திடம் வழங்கியுள்ளது.

இந்தப் படகு யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றினால் கட்டப்பட இருக்கிறது.

மூன்று மாதங்களுக்குள் படகு கட்டப்பட்டு விடும் என்று செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-3-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டிஷ் பிரதமரின் வாசஸ்தலம் மீது தாக்கு!

லண்டன், பெப் 8

பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான டவுணிங்வீதி 10 ஆம் இலக்க கட்டடத்தின் மீது நேற்றுக் காலை 10 மணிக்கு (லண்டன்நேரப்படி) மோட்டார் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

பிரதமரின் உத்தியோக வாசஸ்தலம் உட்பட பல கட்டடங்கள் சேதமடைந்தன.

பிரதமரின் வாசஸ்தலத்தை இலக்கு வைத்து மூன்று மோட்டார் ஷெல்கள் ஏவப்பட்டன என்றும் அவற்றில் இரண்டு ஷெல்கள் வெடிக்கவில்லை என்றும் பி. பி. சி. அறிவித்தது.

வாகனம் ஒன்றில் இருந்து இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அவ்வாகனம் எரிந்து போனதாகவும் அறிவிக்கப்பட்டது.

அந்தச் சமயத்தில் பிரதமரின் வாசஸ்தலத்தில் போர்க்கால அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அமைச்சரவை அலுவலகத்தின் ஜன்னல் கண்ணாடிகள் சிதறின. வீதியில் சென்ற இருவர் கண்ணாடிச் சிதறல்களினால் காயமடைந்தனர்.

ஐரிஸ் விடுதலை இராணுவத்தினர் இத்தாக்குதலை நடத்தி இருக்கலாம் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-எ)

## வ.பி.போ.ச..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நூற்றுக்கணக்கான ஊழியர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். அவர்கள் சுரகிகுளதிராணகோஷங்களையும் எழுப்பினர்

ஊர்வலமாகச் சென்ற ஊழியர்கள் அரச அதிபரிடமும், செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளிடமும் மகஜர்களை வழங்கினர். (ஒ 3)

## மணலாறில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நதாகவும்—

அந்தப் படையினரை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கிய திடீர் பலத்த இழப்புகளுடன் அவர்கள் முகாமுக்குப் பின்வாங்கினர் என்றும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த அதிரடித் தாக்குதலில் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம் வருமாறு;-

- ★ ரி-56 ரக துப்பாக்கி – 3, மகஸின் – 13
- ★ ரி 81 எல். எம். ஜி – 1, மகஸின் – 4
- ★ ரி 81 ரகத் துப்பாக்கி-1, மகஸின் – 4
- ★ 303 ரைபிள்கள் – 4, மகஸின் – 4, ரவைகள் – 223
- ★ எஸ். எல். ஆர் – 1, மகஸின் – 4
- ★ ரி 81 ரைபிள் கிரனேட் -10
- ★ மிதிவெடிகள் – 15
- ★ நேட்டோ ரவைகள்–30
- ★ ஐ எம். ரவைகள்–710
- ★ 303 சார்ஜ்ஜர் கிளிப் - 45 [உ]

## அப்பாவி--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துமாறு விமானப்படையினருக்கு நாம் உத்தரவு எதையும் வழங்கவில்லை. அவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டால் - உத்தரவுகளை விமானிகள் மீறினால் - அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

நாம் போரில் ஈடுபட்டுள்ளோம். போரில் பொதுமக்கள் இடையில் சிக்குவது தவிர்க்க முடியாதது.

வடபுலத்து மக்கள் தாமாகவே தாக்குதல் நடக்கும் இடத்தில் இருந்து வெளியேறிவிட்டால் நாம் ரசிகமாக போரை முடித்து விடுவோம். அந்த இடத்திலேயே தங்கியிருக்க அவர்கள் விரும்பினால் அது அவர்கள் இஷ்டம்''

—இப்படி அமைச்சர் ரஞ்சன் மேலும் சொன்னார் [உ 3]

## அகதிகளை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அறியவருகிறது,

இதேவேளை -

அகதிகளைத்திருப்பி அனுப்புவது தொடர்பாக இந்திய அதிகாரிகள், ஐக்கிய நாடுகள் அகதிகள் தூதரக அதிகாரிகளுடன் தொடர்ந்து பேச்சுகள் நடத்தி வருவதாக அறியவருகிறது

இந்த விடயத்தில் இந்தியா தொடர்ந்து கூடுதல் அக்கறை காட்டி வருகின்றது.

அகதிகளைத்திருப்பி அனுப்புவதற்குத் தேவையான செலவு மற்றும் பாதுகாப்பு வசதிகளை தர இந்தியா தயாராக இருப்பதாகவும் -

இந்த அகதிகளை மன்னார், திருகோணமலை போன்ற இடங்களில் வைத்து ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான தூதரகம் பேணுவதற்கு உரிய நிதி வசதிகளை இந்தியா வழங்கும் என்றும்-

தூதரக அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் யாழ் வந்த தூதரக அதிகாரி ஒருவர் மூலம் இந்த விபரங்கள் தெரிய வந்தன [உ-3]

# நிவாரணம் வழங்கல்; மீண்டும் பழைய முறை

## 5 ஆம் கட்டம் கிடைக்கும்

இடம் பெயர்ந்தோர், தொழில், வருமானம் இழந்தோர் ஆகியோருக்கான ஐந்தாம் கட்ட உலர் உணவு நிவாரணம் வழங்கும் திகதி குறித்து முடிவு செய்ய யாழ். செயலகத்தில் இன்று கூட்டம் நடைபெற இருக்கிறது.

சகலருக்குமான ஒரு மாத கால இலவச நிவாரணத்திட்டம்—4 கட்டங்களாக வழங்கப்பட்டு பூர்த்தி அடைந்தது. அதைத் தொடர்ந்து மீண்டும் முன்னர் வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொடர் நடைமுறைக்கு வருகிறது.

அதன் அடுத்த கட்டமான 5 ஆம் கட்ட நிவாரணமே இனி வழங்கப்பட இருக்கிறது.

அதேசமயம் ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுவோருக்கு பங்கீட்டு அட்டைக்குப் பணத்துக்கு பொருள்கள் வழங்கும் திட்டமும் மீண்டும் நடைமுறைக்கு வருகிறது. [ஒ-3]

# வளி மண்டலத்தில் பிரவேசித்த ரஷ்யாவின் "சல்யூட்-7" வெடித்துச் சிதறியது!

லண்டன், பெப். 8

கடந்த பதினெட்டு ஆண்டுகளாக விண்ணில் வலம் வந்து கொண்டிருந்த ஆளில்லா ரஷ்ய விண் கப்பலான 'சல்யூட்—7' தனது சுற்றுப் பாதையில் இருந்து விலகி, வளிமண்டலத்தினுள் பிரவேசித்துச் சிதறியது.

அதன் சிதறல்கள் நேற்று ஆர்ஜென்ரீனாவுக்கும் சிலிக்கும் இடையே உள்ள ஆண்டிஸ்மலைத் தொடரின் மீது வீழ்ந்தன.

41 தொன் எடையுள்ள இந்த விண்கப்பல் 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் 19 ஆம் திகதி விண்ணுக்கு ஏவப்பட்டது;

வளி மண்டலத்துக்குள் 'சல்யூட்—7' மணிக்கு 27 ஆயிரம் மைல் வேகத்தில் பிரவேசித்தபோது உடைந்து சிதறியது என்றும்—

இதனால் கதிர்வீச்சு எதுவும் வெளிபேறவில்லை என்றும் விஞ்ஞானிகள் அறிவித்தனர். [ஒ-எ]

## ஜனாதிபதி ஜெயலலிதா சந்திப்பு

புதுடில்லி, பெப். 8

அ. தி மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா கடந்த புதன்கிழமை புதுடில்லியில் ஜனாதிபதி வெங்கட்ராமனைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

இருபது நிமிடங்கள் வரை நீடித்த இச்சந்திப்பின்போது தமிழ்நாட்டில் சட்டம்—ஒழுங்கு பராமரிப்பது பற்றி விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. (ஒ-எ)

## சாவகச்சேரி; ஹெலி சூடு

யாழ்ப்பாணம், பெப். 8

சாவகச்சேரியிலும் நேற்று மாலை 4 மணியளவில் ஹெலி தாக்குதல் நடத்தியது. (ஒ-15)

## நகரில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பக்கத்து வளவில் நின்ற சபாரத்தினம் ரவிசங்கர் (வயது 15) என்ற மாணவனும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ-5-15)

# மரண அறிவித்தல்கள்

## குமாரசாமி சபாரெத்தினம்

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட குமாரசாமி சபாரெத்தினம் நேற்று முன்தினம் காலமாகிவிட்டார்

இவர் சிவமணியின் அன்புக் கணவரும், கெங்காதரன், தயாதரன், தர்ஷினி ஆகியோரின் தந்தையும், சாவித்திரி, ரமேஷ் ஆகியோரின் சகோதரரும், மகேஸ்வரி, பரமேஸ்வரி, சாரதாம்பிகை, புவனேஸ்வரி, இராமநாதன், நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்

அன்னாரின் பூதவுடல் (9-2-91) நாளை செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

[சி/5738]

## தம்பிப்பிள்ளை சோமசுந்தரம்

(இளைப்பாறிய மின் அத்தியட்சகர் யாழ். மாநகரசபை)

யாழ். மாநகரசபையில் மின் அத்தியட்சகராக கடமையாற்றி இளைப்பாறிய தம்பிப்பிள்ளை சோமசுந்தரம் காலமாகிவிட்டார்.

இவர் யோகலட்சுமியின் அன்புக் கணவரும், தங்கராணி, காலஞ்சென்ற ஜெயசுந்தரம், சோமலிங்கம், சோமதி, பத்மாவதி, சௌந்தரராணி, யோகமலர், உதயகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், மூர்த்தராசா, கமலாதேவி, அருளானந்தம், பாலசிங்கம் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற இரத்தினம், கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (8-2-91) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இல 9, பாரதி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
சோ. சோமலிங்கம்

இல: 9, பாரதி வீதி,
யாழ்ப்பாணம். (15428)

## வீரசிங்கம் லோகேஸ்வரன்

(இ. போ. ச. சாரதி, கோண்டாவில்)

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த வீரசிங்கம் லோகேஸ்வரன் 7-2-91 அன்று சிவபதமடைந்தார்.

இவர் பொன்மலரின் அன்புக் கணவரும், உமா, காலஞ்சென்ற உதயக்குமார் (இ. போ. ச), உமாச்சந்திரன், உஷா ஆகியோரின் அன்புத் தந்தையும், கொக்குவில் உப அலுவலக முன்னாள் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரும், வலி கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் விசேட ஆணையாளருமாகிய திரு. வீ. யோகரட்ணம் அவர்களின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (8-2-91) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்

சிங்கன் வீதி,
(கலைவாணி மில் ஒழுங்கை)
கொக்குவில் கிழக்கு.

தகவல்:
வீ. யோகரட்ணம்
[15427]


## வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி

எங்கள் நிதி நிறுவனம் 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்

LICENCE No. NBS/R/90/021

ஷப்றா
யுனிக்கோ பினான்ஸ் லிமிட்.

61, நியு புல்லர்ஸ் வீதி,
கொழும்பு – 4.

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



YEAR 9, 10, 11
புதிய பிரிவுகள்
ஆரம்பம்
09 02-91
Sat 8.00 a.m.
SCIENCE ACADEMY
NALLUR
(சி/5786)



SUPER SHINE INSTITUTE
76/2 Temple Road, Jaffna.
கணக்கியல்
92 A/L பிரிவு 2
ஆரம்பம்: 1991-02-10
பி.ப. 4 மணி
ஆசிரியர்:- D. SAM
(15784)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 102/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 08-02-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org